புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள 6 ஆலைகளுக்கு 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, அந்த ஆலைகள் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை தனியாருக்குச் சொந்தமாக இருந்தது. சோமசுந்தரம் செட்டியார் என்பவருக்குச் சொந்தமாக இருந்ததை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் அது அரசு சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையாக மாற்றப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வந்தது. பல்வேறு முயற்சிகள் எடுத்தாலும்கூட, அது இலாபத்திலே இயங்க முடியாத ஒரு நிலையில் இருந்த காரணத்தினால், அது மூடப்பட்டு, அந்த நூற்பாலையில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிவாரணத் தொகை உரிய முறையிலே வழங்கப்பட்டுவிட்டது. இருப்பினும், 6 நபர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்றார்கள். இன்றைக்கு அந்த வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மீண்டும் ஆட்சியை அமைக்கவிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல விவசாயிகளும், தொழிலாளர்களும் நிறைந்த அந்தப் பகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, எதிர்வரும் காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

86—

உள்விளையாட்டு அரங்கம்

***41128—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS LEGISLATURE

[2016 பிப்ரவரி 19

(அ) புதுக்கோட்டையில் உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உள்விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தின் தலைநகர் புதுக்கோட்டையில், உள்விளையாட்டு அரங்கம் மற்றும் உள்விளையாட்டு மைதானம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியப்புறும் அன்பு, அறிவு, துணிவு மிகுந்த பல்கலைக்கழகம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய இளைஞர்களே நாளைய இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரம் என்கிற கனவை நனவாக்குகின்ற, இந்திய மாநிலங்களில் ஒப்பில்லா ஒரே முதல்வர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள்தான். நாங்கள் கேட்ட மாத்திரத்திலேயே உள்விளையாட்டு அரங்கம் வழங்கியதற்காக புதுக்கோட்டை மாவட்ட அனைத்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.*

எங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த எல். சூர்யா என்கிற வீராங்கனை, தற்போது நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் 5 ஆயிரம் மீட்டர் மற்றும் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கம் வென்று, புதிய சாதனை படைத்துள்ளார் என்பதை இந்தப் பேரவையில் பதிவு

2016 பிப்ரவரி 19]

செய்வதில் பெருமையடைகிறேன். இதேபோன்று, எங்கள் மாவட்டத்தில், சைக்கிள் மற்றும் கால்பந்து வீரர்கள் விளையாட்டில் மிகவும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இளைஞர்களின் நலனில் அக்கறை காட்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டுத் துறையில் புதிய திட்டங்களை அறிவிக்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களுடைய முன்னேற்றத்திற்காக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், இந்தியத் திருநாட்டில் வேறு எந்த முதலமைச்சரும் நினைத்துப் பார்க்காத பல்வேறு சிறப்பான திட்டங்களை தமிழகத்தில் சிறப்பான முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அன்போடு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் உலகத் தரம் வாய்ந்த பல்நோக்கு விளையாட்டு அரங்கங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு 2011-2012 ஆம் நிதியாண்டில், 20 மாவட்டங்களுக்கு 30 கோடி ரூபாயை நிதியாக வழங்குவதற்கு முன்வந்து, 10-2-2012 அன்று 5 மாவட்டங்களுக்கு 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிலும், 3-8-2012 அன்று 5 மாவட்டங்களுக்கு 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிலும், 21-1-2015 அன்று 5 மாவட்டங்களுக்கு 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிலும், ஆகமொத்தம் 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கி, 15 மாவட்டங்களில் உள்விளையாட்டு அரங்கங்கள் அமைத்து, இளைஞர்களுக்கு சிறப்பான முறையில் நல்ல பயிற்சியைக் கொடுக்கின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த பெண் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும், 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும், தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று தமிழகத்திற்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார் என்பதை

இங்கே அன்போடு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய போட்டிகளிலும், சர்வதேசப் போட்டிகளிலும் தமிழகத்தின் சார்பில் விளையாடி, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் விதமாக, தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பங்குகொண்டு, இரு ஓட்டப் பந்தயப் போட்டிகளிலும் வெற்றி பெற்று, தங்கப் பதக்கத்தை வென்று புதிய சாதனை படைத்து, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த சூர்யா அவர்களுக்கு 5 இலட்சம் ரூபாயை ஊக்கத் தொகையாகக் கொடுக்கின்ற முதலமைச்சர், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே அன்போடு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு அம்மா அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில், விளையாட்டுத் துறைக்கென்று, மாணவிகள் விளையாட்டு விடுதி ஒன்றைக் கொடுத்திருக்கின்றார்கள். இன்றையதினம் 57 மாணவிகள் அங்கே தங்கிப் படித்து, சிறப்பான முறையில் ஹாக்கி தடகளப் போட்டி மற்றும் பளுதூக்கும் போட்டிகளில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். மேலும், 85 இலட்சம் ரூபாய் அளவில் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து இங்கே கோப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. விரைவில் அங்கே விளையாட்டு வீராங்கனைகளுக்காக சிறப்பான முறையில் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும்.

இன்றையதினம், தமிழகத்தில்தான் சிறப்பான முறையில் விளையாட்டு விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கு, விளையாட்டு வீராங்கனைகளுக்கு நாள் ஒன்றுக்கு, சத்தான உணவு சாப்பிடுவதற்காக ரூ.250/- வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்குகின்ற ஒரே முதலமைச்சர், இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். சிறப்பான முறையில் தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமைதேடிக் கொடுக்கின்ற விளையாட்டு வீரர்களை, வீராங்கனைகளை மற்றும் இளைஞர்களைப் போற்றிப் பாதுகாக்கின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.